P.R.NO:-72

நாள் :- 21.07.2017

## புத்திரிக்கை செய்திக்குறிப்பு

திருநெல்வேலி பேட்டை அரசினர் தொழிற் பயிற்சிநிலையத்தில் காலியாக உள்ள Employability Skill Instructor ஒரு காலி பணியிடத்தினை தொகுப்பு ஊதியத்தின் அடிப்படையில் நேரடியாக நியமனம் செய்யும் பொருட்டு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தொகுப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/- (ரூபாய் இருபது ஆயிரம் மட்டும்) வழங்கப்படும். வயது 18 முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும்.

<u>கல்வித்தகுதி:</u>

1) எம்.பி.ஏ. அல்லது பி.பி.ஏ. பட்டப்படிப்பு மற்றும் இரண்டு வருட பணி முன் அனுபவம்.

(அல்லது)

2) சமுகவியலில் பட்டப்படிப்பு அல்லது பொருளாதாரத்தில் பட்டப்படிப்பு மற்றும் ஆசிரியர் பணியில் இரண்டு வருட முன் அனுபவம்.

பெயர், முகவரி, பிறந்த தேதி கல்வித்தகுதி, முன் அனுபவம் போன்ற சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பம் இந்நிலையத்தில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 03.08.2017 அன்று மாலை 5.00 மணிக்குள் துணை இயக்குநர் /முதல்வர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், பேட்டை, திருநெல்வேலி-10 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

துணை இயக்குநர்/முதல்வர்(பொ),
அரசினர் தொழிற்பயிற்சிநிலையம்,
பேட்டை, திருநெல்வேலி-10

19/7/17

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.